

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.12.2024) விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூரில், பேரிடர் மீட்புப் படை வீரர்கள் ரப்பர் படகுகள் மூலம் வெள்ளநீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் உள்ள வீடுகளில் இருக்கும் மக்களுக்கு உணவு பொட்டலங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, வி.செந்தில் பாலாஜி, எஸ்.எஸ். சிவசங்கர், நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், லட்சுமணன், சிவா, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.க.மணிவாசன், மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், போக்குவரத்து துறை ஆணையருமான சுன்சோங்கம் ஜடக் சிரு, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி. பழனி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.12.2024) கனமழையால் பாதிக்கப்பட்டு விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், ஜெ.வி.எஸ். சக்தி திருமண மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 2000 நபர்களுக்கு வேட்டி, சேலை, உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். உடன், அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, வி.செந்தில் பாலாஜி, எஸ்.எஸ்.சிவசங்கர், நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், லட்சுமணன், சிவா, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர்டாக்டர்.க.மணிவாசன், மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், போக்குவரத்து துறை ஆணையருமான சுன்சோங்கம் ஜடக் சிரு , மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி. பழனி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.12.2024) ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக தருமபுரி மாவட்டம், மிட்டாநூலஅள்ளி ஊராட்சி, திருமலைக்கவுண்டன்கொட்டாயில் உள்ள வண்ணாந்தேரி ஏரி நிரம்பி உபரி நீர் ஊருக்குள் வருவதை தடுக்கும் வகையில் தூர்வாரப்படும் கால்வாயைப் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளை அறிவுறுத்தினார். இந்த ஆய்வில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்டச் செயலாளர்கள் தடங்கம் சுப்பிரமணி, பெ.பழனியப்பன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ச. திவ்யதர்சினி, மாவட்ட ஆட்சித்தலைவர் கி. சாந்தி, ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.12.2024) ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக தருமபுரி மாவட்டம், உங்கரானல்லி ஊராட்சி, ஏமகுட்டியூரில் பெருக்கெடுத்து ஓடும் சனத்குமார நதியை பார்வையிட்டு பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார். இந்த ஆய்வில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்டச் செயலாளர்கள் தடங்கம் சுப்பிரமணி, பெ.பழனியப்பன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தினார்

# தருமபுரி மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயல் - மழையால் பாதிப்பு! சீரமைப்பு பணிகள்!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்!

**தருமபுரி, டிச.3–**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயல் மழையினால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு, சீரமைப்பு பணிகளை துரிதப்படுத்தி, முகாமில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு நிவாரண உதவிப் பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.12.2024) தருமபுரி மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயல் மழையினால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் பார்வையிட்டு, சீரமைப்பு பணிகளை துரிதப்படுத்தி, முகாமில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு நிவாரண உதவிப்பொருட்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கினார்.

தர்மபுரி மாவட்டத்தின் டிசம்பர் மாத சராசரி மழையளவு 39.80 மிமீ மட்டுமே என்ற நிலையில், ஃபெஞ்சல் புயலின் தாக்கத்தினால் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் சராசரியாக 144.45 மி.மீ மழை பெய்துள்ளது. அரூர் வட்டத்தில் அதிகபட்சமாக 422 மி.மீட்டரும், பாப்பிரெட்டிப்பட்டியில் 273 மி.மீட்டரும் மழை பதிவாகியுள்ளது.

புயல் மழை காரணமாக தருமபுரி மாவட்டத்தில் ஊராட்சிகளைச் சேர்ந்த 59 குளங்களும், 129 ஏரிகளும் முழு கொள்ளளவை எட்டியுள்ளன. பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 5 ஏரிகள் முழுகொள்ளளவை எட்டியுள்ளன. அரூர் வட்டத்தில், ஃபெஞ்சல் புயல் மழையினால் பாதிப்புக்குள்ளான சித்தேரி மலைப்பகுதிக்கு செல்லும் மாநில நெடுஞ்சாலையை சீர்செய்யும் நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வாணியாறு, அரூர் வட்டம், வரட்டாறு மற்றும் நல்லம்பள்ளி வட்டம் தொப்பையாறு அணைகள் முழு கொள்ளளவை எட்டியுள்ளன. வாணியாறு கரையோர பகுதியில் குடியிருந்த 80க்கும் மேற்பட்ட பொதுமக்கள் அரூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள காமாட்சியம்மன் மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக தருமபுரி மாவட்டம், உங்கரானல்லி ஊராட்சி, ஏமகுட்டியூரில் பெருக்கெடுத்து ஓடும் சனத்குமார நதியை பார்வையிட்டு பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார். தொடர்ந்து நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தின்னஹள்ளி ஊராட்சி வத்தல்மலை அடிவாரத்தில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட தரைப் பாலத்தை சீரமைக்கும் பணியை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தின்னஹள்ளி ஊராட்சி, வேப்பமரத்தூர், வே.கொம்மத்தம்பட்டியில் இணைப்புச் சாலை துண்டிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு சென்ற துணை முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து இணைப்புச்சாலையை உடனடியாக சீர்செய்யும் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து மிட்டாநூலஅள்ளி ஊராட்சி, திருமலைக்கவுண்டன் கொட்டாயில் உள்ள வண்ணாந்தேரி ஏரி நிரம்பி உபரி நீர் ஊருக்குள் வருவதை தடுக்கும் வகையில் தூர்வாரப்படும் கால்வாயைப் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

அரூர் காமாட்சியம்மன் திருமண மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள 250க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள், போர்வை உள்ளிட்ட நிவாரண பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.

இந்த ஆய்வுகளில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி, ஆகியோர் உள்பட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் தி.மு.கழக எம்.பி.க்களின் குரல்!

## சரமாரி கேள்வி!

**புதுடெல்லி, டிச.3–**

**நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் தமிழ்நாட்டின் நலனுக்காக நேற்று (2.12.2024) எழுப்பிய சரமாரி கேள்விகள் வருமாறு:–**

**ஆயுள் மற்றும் மருத்துவக் காப்பீட்டின் மீதான ஜிஎஸ்டியை நீக்குக!**

தயாநிதி மாறன்

தனி நபர் ஆயுள் மற்றும் மருத்துவக் காப்பீட்டின் மீதான ஜிஎஸ்டியை நீக்க வேண்டும் என திமுக மக்களவை உறுப்பினர் தயாநிதி மாறன் அவர்கள் ஒன்றிய நிதி அமைச்சரிடம் இன்று கேட்டுள்ளார். குறைந்தபட்சம் மூத்த குடிமக்கள் மற்றும் தனிநபர்களுக்கு ரூ. 5 லட்சம் வரையிலான ஆயுள் காப்பீடுகளுக்கு வரிநீக்கம் செய்ய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜிஎஸ்டி குறைப்பினால் பிரீமியம் விகிதங்களில் மாற்றம் ஏற்படும்போது தொடர்புடைய நிறுவனங்கள் அதை நுகர்வோருக்கு முறையாக வழங்குகின்றனவா என்பதை இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (ஐஆர்டிஏஐ) உறுதிசெய்யவேண்டும் என்றும் மருத்துவக் காப்பீட்டின் மீதான ஜிஎஸ்டியை நீக்குவதன் மூலம் எல்லோருக்கும் சமமான சுகாதார பாதுகாப்பு கிடைக்க அரசு வழிசெய்ய இயலும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**தமிழ்நாட்டில் சிலைக் கடத்தலை தடுக்க கோரிக்கை**

டாக்டர் கலாநிதி வீராசாமி

தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் அமலாக்கத்துறையில் பதிவுசெய்யப்பட்ட சிலை கடத்தல் வழக்குகள் பற்றிய விவரங்களை வெளியிடுமாறு தி.மு.க. எம்.பி. டாக்டர் கலாநிதி வீராசாமி மக்களவையில் இன்று கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது :

இதுவரை கடத்தப்பட்ட சிலைகள் எந்தெந்த கோவில்களை சேர்ந்தவை மற்றும் அவற்றின் மதிப்பு விவரங்கள் உள்ளடங்கிய பட்டியல் வெளியிட வேண்டும்.

சிலைத் திருட்டை தடுப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் மற்றும் தமிழ்நாட்டில் சிலைக் கடத்தல் தொடர்பாக பதிவுசெய்யப்பட்ட வழக்குகளில் கைது செய்யப்பட்ட/குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் விவரங்கள் மற்றும் அவ்வழக்குகளின் இன்றைய நிலையை வெளியிட வேண்டும்.

சிலைக் கடத்தல் வழக்குகளில் இதுவரை குற்றம் நிரூப்பிக்கப்பட்டு சட்டப்படி தண்டனை பெற்றுள்ள மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் தனிநபர்கள் பட்டியலையும் ஒன்றிய அரசு வெளியிட வேண்டும்.

**வேலூரில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி வேண்டும்**

கதிர் ஆனந்த்

இ.எஸ்.ஐ.யின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு உதவுவதற்காக வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் இ.எஸ்.ஐ.சி. மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியை நிறுவ வேண்டும் என வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் அவர்கள் மக்களவையில் இன்று கோரிக்கை வைத்துள்ளார்.

மேலும் வேலூர் மக்களவைத் தொகுதியில் உள்ள வாணியம்பாடி, ஆம்பூர், வேலூர், குடியாத்தம் மற்றும் பேர்ணாம்பேட் ஆகிய இடங்களில் உள்ள இஎஸ்ஐ மருந்தககங்களின் தரத்தை ஒன்றிய அரசு உயர்த்த வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

**தர்மபுரி காளிகரம்பில் சாலை வசதி வேண்டும்**

அ.மணி

தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி பிளாக், கொண்டகரஹள்ளி ஊராட்சியில் அமைந்துள்ள காளிகரம்பு வனப்பகுதி வழியாக சாலை அமைக்க அப்பகுதியில் ஆய்வு மேற்கொண்டோம். இத்திட்டம் நிறைவடைந்தால் பாப்பிரெட்டிப்பட்டி, பைரநத்தம், மெணசி, துருஞ்சிப்பட்டி, பொம்மிடி, மணலூர், கொப்பக்கரை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதி மக்களின் பயணம் சுமார் 30 கி.மீ., குறையும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, தமிழ்நாடு தருமபுரி மாவட்டம் கொண்டகரஹள்ளி பஞ்சாயத்தில் அமைந்துள்ள காளிகரம்பு வனப்பகுதிக்கு பிரதான் மந்திரி கிராம் சடக் யோஜனா திட்டத்தின் கீழ் கிராமப்புற சாலை இணைப்பு வழங்க வேண்டும் என தி.மு.க. எம்.பி. அ.மணி மக்களவையில் கோரிக்கை வைத்துள்ளார்.

## மருத்துவக் காப்பீட்டின் மீதான

# மக்களைத் துன்புறுத்தும் ஜி.எஸ்.டி. வரியை நீக்குவது எப்போது?

### மக்களவையில் - கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, டிச. 3-

மூத்த குடிமக்கள் மற்றும் தனிநபரின் ரூ.5 லட்சம் வரையிலான ஆயுள் மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் ஜி.எஸ்.டி வரி நீக்கப்படுமா? ஜி.எஸ்.டி வரி குறைக்கும் பட்சத்தில், அதற்கேற்ப பிரீமியம் தொகையையும் நிறுவனங்கள் குறைப்பதை ஒன்றிய அரசு எவ்வாறு உறுதி செய்யும்? உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை ஒன்றிய நிதி அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் கழக மக்களவைக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் எம்.பி. வினவினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு :

ஆயுள் மற்றும் மருத்துவக் காப்பீட்டின்மீதான ஜி.எஸ்.டி. வரியைக் குறைக்க ஒன்றிய அரசு ஏதேனும் திட்டம் வைத்துள்ளதா? குறிப்பாக மூத்த குடிமக்கள் மற்றும் தனிநபரின் ரூ. 5 லட்சம் வரையிலான ஆயுள் மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு வரிவிலக்கு அளிக்கபடுமா என கேள்வி எழுப்பினார்.

ஆயுள் மற்றும் மருத்துவக் காப்பீட்டின்மீதான ஜி.எஸ்.டி. வரி குறைக்கப்பட்டாலோ அல்லது நீக்கப்பட்டாலோ, ஒட்டுமொத்த ஜி.எஸ்.டி வருவாயில் ஏற்படும் தாக்கம் என்ன? அது குறித்த விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

ஜி.எஸ்.டி வரி குறைக்கப்படும் பட்சத்தில், பிரீமியம் தொகையின் முழுப் பலனும் காப்பீட்டாளர்களுக்குத்தான் காப்பீட்டு நிறுவனங்கள் வழங்குகிறது என்பதை ஒன்றிய அரசு எவ்வாறு உறுதி செய்யும் எனக் கேள்வி எழுப்பினார்.



இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) காப்பீட்டு நிறுவனங்களின் பிரீமியம் விகிதங்களைக் கண்காணிப்பதற்கும், ஜி.எஸ்.டி வரி குறைப் பிற்கேற்ப காப்பீட்டாளர்கள் பயன்பெறும் வகையில் அந்நிறுவனங்கள் திட்டங்களில் திருத்தம் மேற்கொள்கிறதா என்பதனை கண்காணிப்பதற்குமான அதிகாரங்களை பெற்றுள்ளதா? அல்லது அதற்கான புதிய வரைமுறைகளை ஏதேனும் முன்மொழிந்துள்ளதா? எனக் கேள்வி எழுப்பினார்.

மருத்துவக் காப்பீட்டின் ஜி.எஸ்.டி. வரியை குறைப்பதனால், விளிம்புநிலை மக்களும் சுகாதாரப் பாதுகாப்பைப் பெற வழிவகை செய்யும், அந்த வகையில் விளிம்பு நிலை மக்களுக்கும் மருத்துவக் காப்பீட்டைக் கொண்டு சேர்க்க ஒன்றிய அரசு ஏதேனும் ஆய்வு மேற்கொண்டுள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ் – யமுனா ரமேஷ் இல்ல திருமண விழாவில் இதில் மாவட்ட கழகச் செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, வி.ஜி.ராஜேந்திரன், மாநில மாவட்ட நிர்வாகிகள் திருத்தணி எம்.பூபதி, பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, மா.ராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்துதமிழ்செல்வன், வி.குமார், ஜெ. மகாதேவன், காஞ்சனா சுதாகர், மேயர் ஜி.உதயகுமார், சண்.பிரகாஷ், என்.இ.கே.மூர்த்தி, பேபிசேகர் பொன்விஜயன், ஜி.நாராயணபிரசாத் டி.தேசிங்கு, ஆர்.ஜெயசீலன், புஜ்ஜி.டி.ராமகிருஷ்ணன், சே. பிரேம்ஆனந்த் ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, தி.வை.ரவி தங்கம்முரளி, தி.வே.முனுசாமி, நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், ஆர்.செந்தாமரை, பொறியாளர் எம்.மோகன், என்.லட்சுமி, டி.என்.பி.ஹரிபாபு, ஆர்.ரமேஷ், இ.ஏ.சந்திரன், உதயா, ராதாகிருஷ்ணன், தேவராஜ், சேகர், மோகன், உள்பட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## மயிலை த.வேலு சட்டமன்றத் தொகுதி நிதியில்

# 122வது வட்டத்தில் புதிய நியாயவிலைக் கடை!

### அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைக்கிறார்!

*சென்னை, டிச. 3-*

*மயிலை மேற்கு பகுதியில் 122 வது அ வட்டம் பக்ஸ் சாலை மற்றும் ராதா கிருஷ்ணபுரம் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான நியாய விலை கடையை இன்று (03.12.2024 - செவ்வாய்க்கிழமை ) காலை 9:00 மணியளவில் மயிலை சட்ட மன்ற உறுப்பினர் சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் த.வேலு முயற்சியால் தனது சட்ட மன்ற உறுப்பினர் நீதியில் கட்டி முடிக்கப்பட்ட நியாய விலை கடையை மயிலை த.வேலு எம்.எல்.ஏ. முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், பகுதி செயலாளர்கள் நந்தனம் கி.மதி எம்.சி., எஸ். முரளி ஆகியோர் வரவேற்பில் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என். நேரு திறந்து வைக்க உள்ளார்.*

*எனவே இந் நிகழ்விற்கு வட்ட கழக நிர்வாகிகள் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட அணிகலன்கள் நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கின்றனர்*

*இவ்வாறு வட்டச் செயலாளர் அ.நாகராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.*



சென்னை, காமராஜர் சாலையில் உள்ள மாற்றுத் திறனாளிகள் மாநில ஆணையர் அலுவலகத்தில் நேற்று (02.12.2024) சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் முதுகலை பட்டப் படிப்பு மற்றும் முனைவர் பட்டப்படிப்பு பயிலும் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு CSR நிதியின் மூலம் மடிக்கணினி வழங்கினார். இந்கழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் திருமதி எம். லட்சுமி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.